
# ரமலான் கவிதைகள்

**JIH TN WRITERS குழு**
**எழுதிய ரமலான் கவிதைகள்.**

**ஒரு தொகுப்பு.**

தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்களுக்கு இந்தா உன் தண்டனை என்று இல்லாமல் திருந்தி வாழ ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் மாதங்களை விட சிறந்த மாதமான ரமலானை நம்மை அடையச் செய்த நம் இறைவன் கருணையாளன்.

-ரஹ்மத்



உப்பையும் காரத்தையும் சரிபார்த்து
சமைக்கும் பெண்கள் நோன்பு நோற்ற
நிலையில் அதை பார்ப்பதே இல்லை
இருப்பினும் அந்த உணவு ருசிக்கிறது
ஈமான் என்னும் சுவையால்!

-ரஹ்மத்



என் வாழ்க்கைப் பக்கங்களில் எழுதிய பிழைகளை அழிக்க இதோ ஓர் அருமையான எரேசர்! இனிய ரமலான்.

-லத்தீஃபா இக்பால் மைந்தன்



இஸ்லாமியப் பள்ளிக்கூடத்தில்
இதோ வருகிறது
ஆண்டு தேர்வு !
இனிய ரமலான்!

-லத்தீபா இக்பால் மைந்தன்



உணவே மருந்தென்றால்
உண்ணா நோன்பு
உடல், ஆன்மா, மனம்
அனைத்திற்கும் ஓர் அருமருந்து
இதோ எங்கள்
இனிய ரமலான்!

-லத்தீபா இக்பால் மைந்தன்



எங்கள் வீட்டுப்
பக்கத்தில்
எலுமிச்சை
வண்டிக்காரர்
ஆவலோடு
காத்திருந்தார்
ரமலானின்
வருகைக்காக!

-லத்தீபா இக்பால் மைந்தன்

நாங்கள் ஏழைகள்!

பகலில் மட்டும்
பசியோடு இருந்தால் நோன்பு என்கிறார்கள் !

நாங்கள் நாள் முழுவதும்
பசியோடு இருக்கிறோம்!
அதன் பேர்
பட்டினியாம்!

-லத்தீபா இக்பால் மைந்தன்



மனதின் தீமைகளை தடுக்க ஒரு
கேடயமாய்
இதோ வருகிறது
இனிய ரமலான்!

-லத்தீபா இக்பால் மைந்தன்

கல்லல்ல !
இரும்பல்ல !

அதை விடவும்
உறுதிமிக்க,

நோன்பென்னும் கேடயத்தை,

பொய் பேசி
புறம் பேசி

உடைத்து
நொறுக்காதீர் !

நன்மைகளை
இழக்காதீர்!

-லத்தீபா இக்பால் மைந்தன்

சுடச்சுட இட்லி
மொறு மொறு தோசை

பச்சை மிளகாய் காரத்தில் வெள்ளையாய்
தேங்காய் சட்னி

நெய்ப்பொங்கல் மெதுவடை
சூடான சாம்பார்

பிரியாணி
ப்ரைட் ரைஸ்
அத்தனையும்
எங்களிடம்
தட்டில் வைத்தாலும்
கையில் கொடுத்தாலும்

என்ன சுவையானாலும்
தொட்டுக் கூட
பார்க்க மாட்டோம்

அதி-காலை முதல்
அந்தி சாயும் வரை

சொட்டுத்  தண்ணீர் கூட தொண்டைக்குள் விடமாட்டோம்

யாருமே பார்க்காத இடத்தில் இருந்தாலும் ஹலாலான உணவனைத்தும்
ஹராமாக மாறி நிற்கும்

பொய் இருக்காது
புறம் இருக்காது

அனாவசியமான பேச்செதுவும் இருக்காது

திருக்குர்ஆனை ஓதிடுவோம்
இறை தியானம் புரிந்திடுவோம்

இரவுகளில் சிறப்பான தொழுகைதனை தொழுதிடுவோம்

இறைவனின் அருள் பெறவே நாள்தோறும் முயன்றிடுவோம்

எங்களால்
இயன்றதனை ஏழைகளுக்கும் கொடுத்திடுவோம்

இறை நம்பிக்கை கொண்டோர் நாங்கள்  இஸ்லாத்தை ஏற்றோர் நாங்கள்

பகை மறந்து சொந்த பந்தம் சேர்ந்தே  மகிழ்ந்திடுவோம்

ஏற்றம் மிக்க
வாழ்வதற்கு
இறையச்சம்
பெற்றிடவே!

இனிய ரமலான் நோன்புகளை இடைவிடாமல் நோற்றிடுவோம்!

-லத்தீபா இக்பால் மைந்தன்



**இஃப்தார்...**

**இறைவன் நாடினால்...**

**சொர்க்கத்தின்**
**மகிழ்ச்சி !**

**உலகில்**
**ஒத்திகை!**

**-லத்தீபா இக்பால் மைந்தன்**

ஜக்காத்...

இறைவன்
நாட்டத்தில்...
வழங்கிய
செல்வத்தை

வாஷிங் மெஷின்
இல்லாமல்

கையால் அடித்துத்
துவைக்காமல்

சத்தம் இன்றி
துவைத்துத்தரும்

சுத்தமான
சோப்புக் கட்டி!

-லத்தீபா இக்பால் மைந்தன்

ஃபித்ரா...

அந்தரத்தில்
தொங்கி நிற்கும்

நன்மைகளை
உந்தித்தள்ளி

இறைவனிடம்
சேர்ப்பதற்கு

ரமலானில்
இறுதியிலே

வருடம் தோறும்
இறைவன் தரும்

அரிதான பூஸ்டர் டோஸ் வாய்ப்பு!

-லத்தீபா இக்பால் மைந்தன்

விதைத்ததோ
நிலம் ஒன்று!

(பயிர்) முளைத்ததோ
நிலம் பன்னிரண்டு!

இம்மையில்
விளைச்சல்,

மறுமையில்
அறுவடை!

இத்தனையும்
தருமே
இறைவனின்
பேரன்பு

இறைவன்
நாடினால்...

துணையாய்
வருமே
ரமலான்
நோன்பு!

-லத்தீபா இக்பால் மைந்தன்

**ஜக்காத்...**

**செல்வத்தை**
**உனக்களித்து**

**உன்னை**
**சேவகனாக்கி**

**தன்னுடைய**
**சேவகனை**

**கண்ணியப்படுத்தும்**
**எல்லாம் வல்ல**
**இறைவனின்**
**உன்னத உதாரணம்**

**-லத்தீபா இக்பால் மைந்தன்**

ரமலான்...

இறை
வேதத்தின்
இனிய
வார்த்தைகளை

நோன்பின்
பகலதனில்
இரவின்
இறைஞ்சுதலில்

வருடிச்செல்ல
வரும்
சொர்க்கத்துப்
பூங்காற்று !

-லத்தீபா இக்பால் மைந்தன்



**ஈதுல் ஃபித்ர்...**

**வருடம் தோறும்**
**வரும்**
**நோன்பாளிகளின்**
**கான்வகேஷன்!**

**-லத்தீபா இக்பால் மைந்தன்**

ஜக்காத்…

அருள் வளத்தை
அள்ளி எடுக்க
பொருள்  வளத்தில் கிள்ளியாவது
கொடுங்கள் !

-லத்தீபா இக்பால் மைந்தன்

வசந்த ரமலானே வருக...!

வருக வசந்த ரமலானே வருக...!
இஸ்லாத்தின் ஒன்பதாவது
மாதமாம் ரமலான் மாதம்..!

பாவத்தின் வாசல்களை மூடி;
சொர்க்கதின் வாசல்
திறக்கபடும் மாதம்...!

ஷைத்தான் என்னு தீயவனை
கட்டிப்போடும் மாதம்...!

பசி என்ற உணர்வை
யாவரும் உணரக்
கூடிய மாதம் ...!

ஆயிரம் மாதங்களை
விட சிறந்த (லைலத்துல் கதரி)
என்கின்ற இரவை
அடைய கூடிய மாதம் ..!

பொய் புறங்களை
புறக்கணிக்கபடும்
மாதம்...!

(ரயான் )என்னும் சொர்க
வாசலில் நுழைய
வைக்கபடும் மாதம்..!

சங்கை மிக்க
(துராவீ தொழுகையை
அடைய கூடிய மாதம்...!

செல்வந்தவர்கள் ஈகை
மனப்பான்மையை
அதிகபடுத்தும் மாதம்...!

இறையச்சங்களை
மேம்படுத்த படும்

**மாதம்...!**

இறுதி இறை தூதருக்கு
இறை செய்தியான
இறை அருள் திருகுர்ஆன்
இறங்கபட்ட மாதம்...!

இவ்வனைத்தையும் இறைவன்
நமக்கும் பரிசாக
வழங்கிய மாதம் ...!

பிறை ஒன்றிலிருந்து
பிறை முப்பது வரை
நம்மை அழகிய முறையில்;
நல் அமல்களை செய்ய
வைத்த மாதம் ...!

மற்ற பதினொரு மாதங்களும்
தோற்று போகின்றது
இவ்வொருமாதத்தால்

இவ்வனைத்தையும் கற்று கொடுத்த
இம்மாதம் (ஷவ்வால்)
பிறை ஒன்றில்
நான் சென்று வருகின்றேன்;
நீ உன் ஈமானை பலப்படுத்திக்கொள்

நான் ஒவ்வொரு மாதமும் வருவேன்
பிறையாக என் பெயர் மட்டுமே

மாறுமே தவிர
நான் கற்று கொடுத்த அமல்கள்
மாறாது...!
நீ என்னை நினைவில்
வைக்கும் வரை
இப்படிக்கு ரமலான்...!

- ஷா. முஸ்மீரா பர்வீன்

ரஹ்மத்தான ரமலானே வருக
புனித மாதத்தின் முதல் பத்தை
ரஹ்மத்தால் நிரப்ப வரும் ரமலானே வருக!

கல்நெஞ்சனையும் உள்ளம் கரையச் செய்து
இரண்டாம் மஃபிரத்தை - கொண்டு
வரும் மாசற்ற ரமலானே வருக!

தாயை விட 70 மடங்கு அன்புடையவனின்
கருணையால் நரகிலிருந்து விடுதலையாக்கும்
விந்தையான ரமலானே வருக! வருக!
உன்னை புரிந்து அறிந்து அமல் செய்வதால்
வாழ்நாள் எல்லாம் ரமலானாக இருக்கக் கூடாதா?
என ஏங்குகிறது - எங்கள் நெஞ்சம்.

-தஞ்சிலா பானு

நான் குர்ஆன் பேசுகிறேன்

மனிதா
நான் அனைவருக்கு மாணவன்

மனிதா
நான் மறைவானதை  நான் அறிவேன்

மனிதா
அதையும் உனக்கு சொல்லித் தருவேன்

மனிதா
உன் பலம் என்ன என்று நான் அறிவேன்

மனிதா
உன் பலவீனமும் என்ன என்று நான் அறிவேன்

மனிதா
உன் படைப்பு எப்படி அனைத்தையும் நான் கற்றுத் தருவேன்

மனிதா
சென்ற காலமும் நான் அறிவேன்

அதிலே பல படிப்பினைகளும் நான் தருவேன்

மனிதா நிகழ்காலம் நான் அறிவேன் அதில் எப்படி வாழனும் என்பதையும் நான் சொல்லித் தருவேன்

மனிதா
உன் மரண வேலையும் நான் அறிவேன்

மனிதா
அந்நேரம் என்ன நடக்கும் என்பதையும் நான் சொல்வேன்

மனிதா
மரணித்த பிறகு உன் நிலை நான் அறிவேன்

மனிதா
உன் ஆன்மா எந்த நிலை என்று நான் குறி சொல்வேன்

மனிதா இன்னுமா தயக்கம்

படித்துப் பார் சிந்தித்துப் பார்

மனிதா
படைத்த உன் இறைவனையே நீ அறிவாய்

எல்லா புகழும் இறைவனுக்கே

- எம் பாத்திமா

வான்மறை குர்ஆன்
மெக்கா என்னும் மாநகரில் ...!
ஹிரா என்ற குகையில்...!
இறைவன் அருளால் ...!
ஜிப்ரில் அலை மூலம்...!
அரபு என்கின்ற மொழியில்...!
முஹம்மது என்கின்ற
இறுதி இறைதூதருக்கு
இறைவேதமான இவ்வேதம்
அருளப்பட்டது...!

இறைவனின் வார்த்தை...!
இறுதி தூதருக்கு (வஹி )...!
உலக மக்களுக்கு வழி காட்டி...!

வழிகெட்ட மனிதர்களுக்கு...!
நேர் வழி காட்டிய இறை வேதம்:
நாம் அதனில் படிப்பினை
கற்றுக்கொள்வது ஏராளம்...!

மறுமை என்கின்ற தேர்வுக்கு...!
உலகம் என்கின்ற வகுப்பறையில்;
குர்ஆன் என்கின்ற புத்தகம்
இல்லையெனில் ;
மறுமையில் வெற்றி பெற முடியுமா
என்ன...?

முன் சென்ற நபிமார்களின்
வாழ்கையையும்...!
பின் வரும் சமுதாயத்தின் வாழ்க்கையையும்;
இவ்வேததின் நூற்றி பதினான்கு
அத்தியாயமும் பேசுகின்றது...!

**ஒரு மனிதன் எப்படி ...?**
**வேண்டுமானாலும் வாழலாம் ;**
**என்பது வரைமுறை அல்ல...!**
**இப்படிதான் வாழ வேண்டும்**
**என்பதை இவ்வேதம் நமக்கு**
**உணர்த்துகிறது...!**
**இவ்வேதத்தின் எடுத்துக்காட்டாக வாழ்ந்த**
**ஒரு மனிதர் என்றால்**
**அது முஹம்மது நபியே ...!**

**- ஷா. முஸ்மீரா பர்வீன்**

கருவுற்ற தாயைப்
போல்...
ரமலானில் நம் பள்ளிவாசல்கள்!

கருக்காலம்
ஒரு மாதம் !

ஷவ்வால் ஒன்றில் டெலிவரி!

குறைப் பிரசவம் என்பதாலா
குறைந்துவிட்டது பள்ளியில் கூட்டம் ?

கூட்டம் கூட்டமாய் நுழைந்தவர்கள்
எட்டிக் கூடப் பார்ப்பதில்லை!

நம் உள்ளத்தின் பேட்டரி என்ன அவ்வளவு வீக்கா?

ஒரு மாதம்
சார்ஜ் ஏற்றியும்
ஒரு நாள் கூட நிற்கவில்லை?

நோன்பு மட்டும்தான் கட்டாயக் கடமையா?

ஐந்து வேளைத்
தொழுகை இல்லையா?

நோன்புக்கு மட்டும் தான் மறுமையில் கேள்வியா?

கடமையான ஐவேளை தொழுகைக்கு இல்லையா?

எல்லா நேரத்திலும் உள்ளத்தையும் ஊடுருவி பார்ப்பது தானே இறைவனின் பார்வை!

இனியாவது சிந்திப்போம்!
இனிய சகோதரர்களே!

ரமலானைப் போல
மற்ற மாதங்களிலும்

இறையச்சத்தோடு பள்ளிவாசல்களை நிரப்புவோம்!

- லத்தீஃபா இக்பால் மைந்தன்

தொழுகை
இஸ்லாத்தின் ஐந்து தூண்களில்...
இரண்டாவது இடம் - தொழுகை.

அதான்...
இறைவன் மனிதனை அழைக்கும்
இனிய ஓசை... அவனது அழைப்பு.

தூய நீரில் உளூ செய்து,
தூய இதயத்துடன்.
தூய இறைவனிடம்
உரையாடத் துடிக்கும்
மகத்தான தருணமே - தொழுகை.

இன்று நீ உறங்காமல் தொழுதால்.
நாளை மண்ணறையில்
நான் உனக்கு
ஒளி விளக்காய் இருப்பேன்.


இது வெறும் கடமை அல்ல...
கடமையைத் தாண்டி,
இறைவனையும் மனிதனையும்
சந்திக்கச் செய்யும்
ஒரு புனிதமான தருணம்.

“ தொழுகை ” எனும் சாவியை
நீ தொலைத்துவிட்டால்,
“ சொர்க்கம் ” எனும் கதவு
எப்படி திறக்கும்....?

ஐந்து முறை குளிப்பவன்
அழுக்கற்றவனாக இருந்தால்,
ஐந்து வேளை தொழுபவன்
பாவமற்றவனாக மாறுவான்.
ஒவ்வொரு வேளையும்
இறைவன் நமக்கு
உணவளிக்க மறப்பதில்லையே...

அப்படியிருக்க,
மனிதன் மட்டும்
அவனுக்கான கடமையை
செய்ய தவற விடலாமா...?

-ஷா. முஸ்மீரா பர்வீன்



ஏழை நோன்பாளி!

ஒரே ஒரு
ரொட்டி தான்
நோன்பை திறக்க!

பாதியைத் தந்து
மீதியை தின்ற
ஏழையின் வயிற்றை
இறைவன் அளிக்கும் மகிழ்ச்சியே நிரப்பும்!

- லத்தீஃபா இக்பால் மைந்தன்

## திருக்குர்ஆன்

கற்றனைத் தூறும் அறிவென்றால்
மாந்தர்க்கு...

தொட்டனைத் தூறும்  அருளாய் திருக்குர்ஆன்!

தொட்டு ஓதினாலும் தொடாமல் ஓதினாலும் ஒன்றுக்குப்
பத்தாய் நன்மைகள் இதில் உண்டு!

யாரும் இல்லாத இருட்டான  மண்ணறையில்

இறைவனின் அருளால் பரிந்துரை
புரிந்திடுமே !


அறிவுக்கு மேல் அறிவு
ஒளிக்கு மேல் ஒளி !

ஓதிட ஓதிட இன்பம் !
செயல்பட செயல்பட
விலகும் துன்பம் !

இறைவனின்
இறுதி வேதமாய்
திருக்குர்ஆன்
இருக்கிறது

நம் வாழ்க்கைக்கு
வழிகாட்ட
காத்துக் கொண்டிருக்கிறது!

- லத்தீஃபா இக்பால் மைந்தன்



ரமலான்

ஆண்டுதோறும்
விளையும் முத்து!

சுவனத்தின்
ரய்யானுக்கு
ஒளி தரும் முத்து!

- லத்தீஃபா இக்பால் மைந்தன்

ரஹ்மத்தான ரமலானே வருக
புனித மாதத்தின் முதல் பத்தை
ரஹ்மத்தால் நிரப்ப வரும் ரமலானே வருக!

கல்நெஞ்சனையும் உள்ளம் கரையச் செய்து
இரண்டாம் மஃபிரத்தை - கொண்டு
வரும் மாசற்ற ரமலானே வருக!

தாயை விட 70 மடங்கு அன்புடையவனின்
கருணையால் நரகிலிருந்து விடுதலையாக்கும்
விந்தையான ரமலானே வருக! வருக!
உன்னை புரிந்து அறிந்து அமல் செய்வதால்
வாழ்நாள் எல்லாம் ரமலானாக இருக்கக்
கூடாதா?
என ஏங்குகிறது- எங்கள் நெஞ்சம்.

- எம் பாத்திமா

வசந்த ரமலானே  வருக
வசந்த ரமலானே வருக
அருள் மழை பொழியும் மாதமே வருக
இறை நம்பிக்கை உணர்த்தும் மாதமே வருக
மன்னிப்பின் மாதமே வருக
ஒரு நன்மைக்கு ஒன்றுக்கு 700 மடங்கு கிடைக்கும் மாதமே வருக
இல்லாருக்கும் இல்லாததை இல்லாமல் ஆகும் மாதமே வருக
கொடை வள்ளலை மக்களிடம் உருவாக்கும் மாதமே வருக
சிறப்பான இரவு தொழுகை கொண்ட மாதமே வருக
ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவுகளை கொண்ட மாதமே வருக
படைத்தவனிடம் நெருங்கும் மாதமே வருக
பள்ளியில் குலுங்கும் மாதமே வருக
மனித குலத்துக்கு ஒளி விளக்காய் வந்த மாதமே வருக
அருள் மழை பொழியும் ரமலானில் நன்மைகள் பலவும் பெற்று
மன்னிப்பையும் பெற்று ரையான் என்ற வாசல் வழியே  சுவனத்தையும்
எங்களுக்கு அருள்வாயே ரஹ்மானே
உன்னிடமே கேட்கின்றோம் அருள் மழை பொழிவாய் ரஹ்மானே

- எம் பாத்திமா

**வாழ்க்கையே புரட்டும் நோன்பு**

ரமலான் பிறை பார்க்க ஆவல் கொள்ளுமே மனம்
ரமலான் பிறை பார்த்ததும் துள்ளுமே மனம்
பிறையைக் கண்ட மனம் அன்றே இரவுத் தொழுகையை நாடுமே மனம்
நடுநிசியில் கண்விழித்து உணவு உண்ண தூண்டுமே மனம்
நடுநிசி உணவே ஆற்றல் மிகு மனமே
சிறு குழந்தைகள் கூட நோன்பிருக்க ஆவல் கொள்ளுமே
சிறு குழந்தைகள் கூட தனித்திருந்து சாப்பிட விரும்பாத மனம்
இறைவன் மட்டுமே நம்மை பார்க்கின்றான் என்ற உணர்வை கொடுக்கின்ற மனம்
வயிறு பசித்திருக்கும் தாகம் எடுத்திருக்கும் தனிமையும் கிடைத்திருக்கும்
உணவும் கண்முன்னே இருந்திருக்கும் சிறு குழந்தைகள் கூட இறை நினைவு
மட்டுமே தடுத்து இருக்கும்
மற்ற எல்லா காலங்களை விடவும் தஹஜ்ஜுத் தொழுகை விடாமல் தொழ
நினைக்கும் மனம்
ஒரு நாள் கூட பஜர் தவறாத மாதம்
வயிறு மட்டுமா நோன்பு உடல் அனைத்துமே நோன்பு
செல்போன் பார்க்காத கண் நோன்பு
பொய் பேசாத புறம் பேசாத நாவு நோன்பு
கெட்டது அனைத்தும் தடுப்பது நோன்பு
உடல் முழுக்க நோன்பிற்கும் மாதம்
தினம் குர்ஆன் ஓதுவதை இலயிக்கும் மனம்
இல்லாருக்கும் வருவோருக்கும் கொடுத்து உதவும் மனம்
நோன்பு திறக்க கண் முன்னே அனைத்தும் வைத்திருக்க இறை கட்டளை
எதிர்கொண்டு காத்திருக்கும் நோன்பு
நோன்போ வருடத்தில் ஒருமுறை வரும் பயிற்சி
பயிற்சியில் கிடைப்பது இறை நம்பிக்கை
இறை நம்பிக்கையில் கிடைப்பதுவோ 11 மாதம் செயல் பயிற்சி
செயற்பயிற்சியில் கிடைப்பதுவோ மன நிம்மதி சாட்சி

- எம் பாத்திமா

ரமலான் மாத கவிதை

கண்ணியம் நிறைந்த மாதம் ரமலான்!
நன்மை தீமைகளை பிரித்து காட்டும் அருள்மறை
குர்ஆன் இறங்கிய மாதம் ரமலான்!
ஆயிரம் மாதங்களை கொண்ட பரகத்தான மாதம் ரமலான்!

ஈமானை புதுப்பிக்க ஆண்டுதோறும்
அரிதாய் வரும் மாதம் ரமலான்!
இறையச்சத்தை அதிகப்படுத்தி முத்தகீன்களை
வளர்த்தெடுக்க வரும் மாதம் ரமலான்!

மக்களுக்கு பயன்தரும் ஒட்டுமொத்த
நன்மைகளையும் ஒருங்கிணைத்து செய்வதற்கு
பயிற்சியளிக்க வந்த மாதம் ரமலான்!

மக்களுக்கு தீமை தரும் ஒட்டுமொத்த
தீமைகளையும் விட்டு விலக
பயிற்சியளிக்க வந்த மாதம் ரமலான்!

பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள வாய்ப்பாக
அல்லாஹ் வழங்கிய மாதம் ரமலான்!
பெருநாள் தினத்தை அனைவரும் மகிழ்ச்சியாய்
கொண்டாட ஃபித்ருசதகாவை கடமையாக்கிய மாதம் ரமலான்!

ஆகையால் முஃமின்கள் அனைவருக்கும் ரமலானை அடையும்
பாக்கியத்தை தந்து நன்றியுடன் உள்ள தூய்மையுடன்
உன்னை சந்திக்கும் வரை நேர்வழியில் வாழ
சிறப்பான முறையில் அருள் புரிவாய் ரஹ்மானே!

இதற்காக ரமலானை வழங்கிய அல்லாஹ்வை
புகழ்வோம்! பெருமைப்படுத்துவோம்! நன்றி செலுத்துவோமாக!

இப்படிக்கு
அல்லாஹ்வின் அடிமை.

குர்ஆன்


சந்தேகம் இல்லாமல் சரியான வேதம் இது
மனித இனம் முழுவதற்கும்
மணியான வழிகாட்டல்
நேரிய வழியதனின்
சீரிய வழிகாட்டி
சத்தியத்தையும் அசத்தியத்தையும் சரியாகப் பிரித்துக் காட்டும்
சத்தான வேதம் இது
முத்தான வேதம் இது
அகிலத்தார் அனைவருக்கும்
அழகான நினைவூட்டல்
படைத்தவனின் புறத்திலிருந்து படைப்புகள் அனைவருக்கும் பண்பான
வழிகாட்டும் அன்பான வேதம் இது

- சையது இப்ராஹிம்

ரமலான் மாதம்

திருக்குர்ஆன் இறக்கப்பட்ட
திண்ணிய மாதம் இது
புண்ணிய மாதம் இது
நல்வழி காட்டுவோர்க்கு
நன்றி சொல்வோம் அல்லவா
அகிலத்திற்கு ஒரு அருட்கொடையாய்
அருள் மறைய இறக்கி வைத்த
அல்லாஹ்வுக்கு நன்றி சொல்ல
அவன் கூறும் வழி இதுவே
அதனால் தான் ரமலானில்
ஆண்டுதோறும் நோன்பு நோற்றல்

- சையது இப்ராஹிம்



## நோன்பு

முன் சென்ற சமூகங்கள் மீது
முதலோன் விதியாக்கியது போல்
நம்மீதும் அதே இறைவன்
நலமான நோன்பு தனை
நமதாக்கி வைத்துள்ளான்
இதன் மூலம் நம்மிடத்தில்
இறைவன் எதிர்பார்ப்பதெல்லாம்
இறையச்சம் என்னும் “தக்வா”வை மட்டுமே

- சையது இப்ராஹிம்

சடங்கு...!

சஹர் செய்து
நோன்பு வைத்து
பசியோடும்
தாகத்தோடும்
நாளெல்லாம் பட்டினியில்
சேர வந்த புண்ணியங்கள்
பொய்யால் கரைவதென்ன...!
புறம் பேசி
சரிவதென்ன...!

சடங்காய்
நோன்பிருந்து
சாதித்தது தான் என்ன?

பொய்யாலும் புறத்தாலும்
நோன்புகள் வீணாகும்
உண்மைதனை உணர்ந்திடுவோம்!
நோன்பதனை காத்திடுவோம்!

பேணுதலாய் இருந்திடுவோம்!
இறையச்சம் பெற்றிடுவோம்!

- லத்தீஃபா இக்பால் மைந்தன்

# ரமலானும் நாமும்

விண்ணின் வாசல் திறக்கின்ற மாதம் - நம்
மண்ணின் பாவம் துடைக்கின்ற மாதம்!
பசியின் வலியை உணர்ந்திட வைக்கும்
படைத்தவன் அருளை பொழிந்திட வைக்கும்!
ஆயிரம் மாதங்கள் கடந்த நற்பேறு - ஒரு
இரவினில் கிடைக்கும் இறைவனின் தூது!
திருக்குர்ஆன் இறங்கிய மாண்புமிகு மாதம்
திசை எங்கும் பரவும் தக்வாவின் கீதம்!
பகல் எல்லாம் நோன்பிருந்து உள்ளம் உருகுவோம்
இரவெல்லாம் நின்று வணங்கி நன்மைகள் பெறுவோம்!
ஈகையும் கொடையும் இதயத்தில் மலர
ஏழையின் கண்ணீர் இப்புவியில் மறைய!
நாவினைக் காப்போம் நயவஞ்சகம் தவிர்ப்போம்
கோபத்தை வென்று பொறுமையைக் கற்போம்!
பாவங்கள் பொசுக்கும் புனிதமான தீயிது
பரிசுத்த உள்ளமே சொர்க்கத்தின் வாயிலு!
முப்பது நாட்களும் பயிற்சியின் காலம் - இனி
எல்லா நாட்களும் இறையச்சம் நீளும்!
தொழுவோம், ஓதுவோம், துஆவில் கையேந்துவோம்
ரமலான் ஒளியில் நாமும் நல்வாழ்வு காண்போம்!

- முஹம்மது அஜ்மல் ராஜேந்திரன்